# முக்கிய குறிப்புகள்

| | |
|---|---|
| **பெருக்கம்** | ✻ **தாவரப் பயிர்ப்பெருக்கம் :** புதிய வகைத் தாவரங்களின் அறிமுகம், தேர்வு செய்தல், பன்மய பயிர்ப்பெருக்கம், சடுதிமாற்றப் பயிர்ப்பெருக்கம், கலப்பினமாக்கம்.<br>✻ **விலங்கினப் பெருக்கம் :** சில சிறப்பான பண்புகளைக் கொண்ட வெவ்வேறு வகையான பெற்றோர்களை கலப்பு செய்து அத்தகு விரும்பத்தக்க பண்புகள் அடுத்த சந்ததிக்கு கடத்தப்படுதல். |
| **தாவரப்பயிர்ப் பெருக்கம்** | (below) |

**<u>அதிக மகசூல் மற்றும் உயர் தரத்திற்கான பயிர்ப்பெருக்கம்</u>**

- *சோனாலிகா, கல்யாண் சோனா* – அரைக்குள்ள கோதுமை (தோற்றம் : மெக்சிகோ)
- *ஐ ஆர் – 8* (அதிசய அரிசி) – *பீட்டா* (இந்தோனேசியா) + *டீ - ஜியோ-வூ-ஜென்* (சீனா)

**<u>நோய் எதிர்ப்புத் திறனுக்கான பயிர்ப்பெருக்கம்</u>**

| பயிர் | ரகம் | நோய் எதிர்ப்புத்திறன் |
|---|---|---|
| கோதுமை | *ஹிம்கிரி* | இலை மற்றும் பட்டைத் துரு நோய், ஹில் பண்ட் |
| காலி∴பிளவர் | *பூசா சுப்ரா*<br>*பூசா பனிப்பந்து K-1* | கருப்பு அழுகல் நோய் |
| தட்டைப்பயிறு | *பூசா கோமல்* | பாக்டீரியா கருகல் நோய் |

**<u>பூச்சிகள் அல்லது தீங்குயிர்கள் எதிர்ப்புத் திறனுக்கான பயிர்ப்பெருக்கம்</u>**

| பயிர் | ரகம் | பூச்சிகளுக்கான எதிர்ப்புத்திறன் |
|---|---|---|
| கடுகு | *பூசா கவுரவ்* | உறிஞ்சி உண்ணும் பூச்சியான அசுவினி |
| அவரைக்காய் | *பூசா செம் - 2*<br>*பூசா செம் - 3* | இலைத் தத்துப்பூச்சி, அசுவினி, கனி துளைப்பான் |
| வெண்டை | *பூசா சவாணி*<br>*பூசா A4* | தண்டு மற்றும் கனி துளைப்பான் |

**<u>மேம்பட்ட ஊட்டச்சத்து தரத்திற்கான பயிர்ப்பெருக்கம் : (புரதம், எண்ணெய், கனிமங்கள்) :</u>**

***<u>உயிரூட்டச்சத்தேற்றம்</u>*** *:* விரும்பத்தக்க ஊட்டச்சத்துக்கள் நிறைந்த பயிர் தாவரங்களை உற்பத்திச் செய்தல்.

- *புரோட்டினா, சக்தி மற்றும் ரத்னா* – லைசின் செறிந்த கலப்பின மக்காச்சோளம்
- *அட்லஸ் 66* – புரதம் செறிந்த கோதுமை

| | |
|---|---|
| **பயிர்ப்பெருக்க முறைகள்** *(அதிக மகசூல் தரும் பயிர் ரகங்களை உற்பத்தி செய்தல்)* | **1. புதிய வகைத் தாவரங்களின் அறிமுகம் :** அதிக மகசூல் தரும் தாவர வகைகளை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அறிமுகம் செய்தல். *எ.கா : பேசியோலஸ் முங்கோ, சீனா.*<br>**2. தேர்வு செய்தல் :** புறத்தோற்றத்தை அடிப்படையாகக் கொண்டு சிறந்த தாவர ரகங்களை தாவரக்கூட்டத்தில் இருந்து பிரித்தெடுக்கும் முறையாகும்.<br>***i)*** *கூட்டுத்தேர்வு முறை :* **எ.கா** : TMV-2, AK-10<br>***ii)*** *தூய வரிசைத்தேர்வு முறை* ***iii)*** *போத்து அல்லது குளோனல் தேர்வு முறை*<br>**3. பன்மய பயிர்ப்பெருக்கம் :** பன்மயம் இயற்பியல் காரணிகளால் தூண்டப்பட்டு குறிப்பிட்ட பண்பினை அடைகிறது. ***எ.கா :*** விதைகளற்ற தர்பூசணி (3n)<br>**பன்மயம்** - இரண்டுக்கும் மேற்பட்ட தொகுதி குரோமோசோம்களைக் கொண்டது.<br>**4. சடுதிமாற்ற பயிர்ப்பெருக்கம் :** மரபியல் வேறுபாடுகளை உண்டாக்குவதன் மூலம் மாற்றங்களை ஏற்படுத்தும் செயல். ***எ.கா :*** சர்பதிஸொனாரா, அட்டாமிட்டா 2 அரிசி.<br>• ***<u>சடுதிமாற்றம்</u>*** *:* DNA–வின் நியூக்ளியோடைடு வரிசையில் திடீர் பாரம்பரிய மாற்றம்.<br>• ***<u>சடுதிமாற்றமுற்ற உயிரினம்</u>*** *:* சடுதிமாற்றத்திற்கு உட்படும் உயிரினம்.<br>• ***<u>மியூடாஜென்கள்/ சடுதிமாற்றத் தூண்டிகள்</u>*** *:* சடுதிமாற்றத்தை தூண்டும் இயற்பியல் அல்லது வேதியியல் காரணிகள்.<br>**5. கலப்பினமாக்கம் :** இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வகைத் தாவரங்களைக் கலப்பு செய்து, அவற்றின் விரும்பத்தக்க பண்புகளை கொண்டு வரும் செயல்முறையாகும். ***எ.கா :*** *டிரிட்டிக்கேல்.* |
| **விலங்கினக் கலப்பு** | வீட்டு விலங்குகளின் ஜீனாக்கத்தை மேம்படுத்தி அதன் மூலம் உற்பத்தியை அதிகப்படுத்துதல்.<br>***<u>உட்கலப்பு</u>*** *:* ஒரே இனத்தைச் சார்ந்த உயிரனங்களை 4 - 6 தலைமுறைகளுக்கு கலப்புச் செய்தல். ***எ.கா :*** *ஹிஸ்ஸர்டேல்*<br>***<u>வெளிக்கலப்பு</u>*** *:* தொடர்பற்ற விலங்குகளைக் கலப்புச் செய்தல். ***எ.கா :*** *கோவேறு கழுதை.*<br>***<u>ஹெட்டிரோசிஸ் அல்லது கலப்பின வீரியம்</u>*** *:* இது கலப்பின சேர்க்கை மூலம் உயர்த்தரப் பண்புகளை உடைய கலப்பினங்களை உற்பத்தி செய்வதாகும். |

## மரபுப்பொறியியல் அல்லது மறுசேர்க்கை DNA தொழில்நுட்பம்

ஜீன்களை கையாள்வதும், புதிய உயிர்களை உருவாக்க ஜீன்களை ஒரு உயிரியிலிருந்து மற்றொரு உயிரிக்கு இடம் மாற்றுதலும் மரபுப்பொறியியல் ஆகும்.

***முக்கியமான கண்டுபிடிப்புகள் :*** பிளாஸ்மிட், ரெஸ்ட்ரிக்ஸன் நொதிகள், DNA லைகேஸ்.

| | |
|---|---|
| **ஜீன் குளோனிங்** | இது மரபொத்த உயிரிகளை பிரதிகளாக உற்பத்தி செய்யும் முறையாகும். |
| **ஜீன் சிகிச்சை** | மனிதனில் குறைபாடுள்ள ஜீன்களுக்கு பதிலாக திருத்தப்பட்ட, செயல்படும் ஜீன்களை இடம் மாற்றி மரபு நோய்களையும், குறைபாடுகளையும் சரிசெய்வது.<br>**வகைகள் :**<br>❋ ***உடல செல் ஜீன் சிகிச்சை :*** உடல செல்களில் திருத்தப்பட்ட ஜீன்கள் இடம் மாற்றப்படுதல்<br>❋ ***கருநிலை அல்லது இனசெல் ஜீன் சிகிச்சை :*** கருநிலை அல்லது இனப்பெருக்க செல்களில் (விந்து & அண்ட செல்) திருத்தப்பட்ட ஜீன்கள் இடம் மாற்றப்படுதல் ஆகும். |
| **குருத்தணுக்கள்** | இவை மாறுபாடு அடையாத அல்லது சிறப்பு செல் வகைகளாக மாற்றமடையாத செல்களின் தொகுப்பு. **குருத்தணுக்களின் வகைகள் :**<br>❋ ***கருநிலைக் குருத்தணுக்கள் :*** ஆரம்பநிலை கருக்களிலிருந்து பெறப்பட்டு வளர்க்கப்படலாம்.<br>❋ ***முதிர் குருத்தணுக்கள் / உடலக் குருத்தணுக்கள் :*** பிறந்த பச்சிளம் குழந்தைகள் மற்றும் பெரியவர்களின் உடலில் காணப்படும்.<br><u>**பயன்கள் :**</u> ***குருத்தணு சிகிச்சை*** – சேதமடைந்த செல்கள், திசுக்கள் மற்றும் உறுப்புகளை சரிசெய்தல். |
| **டி.என்.ஏ விரல் ரேகைத் தொழில் நுட்பம்** | இரு நபர்களின் மரபியல் வேறுபாடுகளை ஒப்பிடும் எளிதான மற்றும் விரைவான முறை.<br>❋ மாறுபடும் எண்ணிக்கையிலமைந்த தொடர் வரிசை அமைப்பு (VNTR) – அடையாளம் காண்பதற்கான மூலக்கூறு குறியீடு.<br>❋ சாட்டிலைட் DNA – 1% வேறுபடுகிற DNA தொடர்ந்து மாறுபடுகிறது. |
| **மரபுப் பண்பு மாற்றப்பட்ட உயிர்கள்** | ***அயல் ஜீன் :*** புதிதாக (DNA வில்) உள் நுழைக்கப்படும் ஜீன்.<br>***மரபுப் பண்பு மாற்றப்பட்ட உயிரிகள் :*** அயல் ஜீனை கொண்ட தாவரங்கள் அல்லது விலங்குகள்.<br>***எ.கா :*** தாவரங்கள் - கோல்டன் ரைஸ் (பீட்டா கரோட்டின் ஜீன்), பூச்சி எதிர்ப்புத் திறன் பெற்ற தாவரங்கள் (Bt ஜீன்)<br>விலங்குகள் - அயல் ஜீனைப் பெற்ற செம்மறி ஆடு (மேம்படுத்தப்பட்ட கம்பளி தரம்), மீன் (அதிக வளர்ச்சி). |

| குறுக்கு கலப்பினங்கள் | கலப்பு | சிறப்பு |
|---|---|---|
| **பிக்கானிரின் பெண் × ஆஸ்திரேலியாவின் மரினோ ஆண்** | *ஹிஸ்ஸர்டேல்* | உட்கலப்பு |
| **ஆண் கழுதை × பெண் குதிரை** | *கோவேறு கழுதை* | வலிமை, நுண்ணறிவு, வேலை செய்யும் திறன், நோய் எதிர்ப்புத் திறன். |
| **வெள்ளை லெக்ஹான் × பிளைமௌத் ராக்** | *கோழி* | அதிக முட்டைகளை உற்பத்தி செய்யும். |
| **பிரவுன் ஸ்விஸ் × சாகிவால்** | *கரன் ஸ்விஸ்* | உள்நாட்டு பசுக்களை விட 2 முதல் 3 மடங்கு அதிகமாக பால் உற்பத்தி செய்பவை. |